# அரச சேவை ஆணைக்குழு

**கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சிங்கள அகராதி அலுவலகத்தின் தலைமை ஆசிரியர் பதவிக்கு மற்றும் சிங்கள கலைக் களஞ்சிய அலுவலகத்தின் தலைமை ஆசிரியர் (ஒப்பந்த அடிப்படையில்) நியமித்தல்.**

01. கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வெற்றிடங்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
   - சிங்கள அகராதி அலுவலகத்தின் தலைமை ஆசிரியர் பதவி
   - சிங்கள கலைக் களஞ்சிய அலுவலகத்தின் தலைமை ஆசிரியர் பதவி

02. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2025.09.04 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்க கூடியவாறு ***"கலாசார அலுவல்கள் பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 08ம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை"*** என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அன்றையத் தினத்திற்கு பிறகு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

03. இந்த அறிவித்தலில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக A-4 (அங்குலம் 8.27x11.69) அளவு தாளில் தயாரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் அனுப்பப்படுதல் வேண்டும்.

04. இப் பதவிக்கு விண்ணப்பங்கள் அனுப்பும் போது விண்ணப்பிக்கும் விண்ணப்பிக்கப்படும் பதவி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

05. விண்ணப்பப்படிவம் தயாரிக்கும் போது கல்வி மற்றும் வேறு தகைமைகள் பற்றிய தகவல்கள் சரியாக உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

06. சேவையில் அமர்த்தல் மற்றும் சேவை நிபந்தனைகள்
   i. சம்பளம் ரூபா. 50,000/- மாதாந்த கொடுப்பனவாக வழங்கப்படும்.
   ii. இப் பதவி நிரந்தர உத்தியோகத்தருக்கு உரித்தான சலுகைகள் மற்றும் உரிமைகள் அற்ற பதவியாகும். இந்த பதவிற்காக நியமிக்கப்படுவது ஒரு வருட ஒப்பந்தக் காலத்திற்கு மாத்திரமாகும்.

07. தகைமைகள்

7.1 கல்வி தகைமைகள்:-

01.பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத்தல்.

7.2 தொழிற் தகைமைகள் :- அவசியமற்றது

7.3 அனுபவம்

01. (i). பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட பேராசிரியர் அல்லது பேராசிரியர் அல்லது துணை பேராசிரியராக பதவியில் குறைந்தபட்சம் 10 வருடங்கள் திருப்திகரமான சேவையில் பூரணத்துவம் பெற்றிருத்தல்.

அல்லது

(ii). அகராதி அலுவலகத்தில் ஆசிரியர் பதவியில் குறைந்த பட்சம் 05 வருடங்கள் தொடர்ச்சியான திருப்திகரமான சேவையில் பூரணத்துவம் பெற்றிருத்தல் வேண்டும்.

02. ஆங்கில மொழி மற்றும் பாலி, கலாசார மொழி பற்றிய பூரண அறிவு பெற்றிருத்தல், (நேர்முகப் பரீட்சையின் போது வாய் மூல கேள்விகளுக்கு பதிலளிக்கும் திறமை மற்றும் எழுத்துப் பரீட்சையின் போது எழுத்து திறமை என்பன பரிசீலிக்கப்படும்.)

7.4 உடற் தகைமைகள்:-
அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியில் கடமையாற்றும் போது சிறந்த உடற் மற்றும் மன உறுதியுடன் இருத்தல் வேண்டும்.

7.5 வேறு தகைமைகள் :-
1. அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரிகள் விசேட பிரஜையாக இருத்தல்
3. பதவிக்கு நியமிப்பதற்காக 7.1 இல் இருந்து 08 வரையிலான தகைமைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டுமென விண்ணப்பபம் கோரப்படும் அறிவித்தல் ∴ வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு குறித்த தகைமைகள் அனைத்துவிதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

08. நியமிக்கும் முறை – நேரடி திறந்த நேர்முகப்பரீட்சை மூலம் நியமித்தல் நடைபெறும். திறந்த நேர்முகப்பரீட்சையின் போது தகைமைகள் பரிசீலிக்கப்படும்.

நேரடி திறந்த நேர்முகப் பரீட்சை

| **புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள்** | **வழங்கப்படும் கூடிய புள்ளகள்** | **தெரிவு செய்வதற்காக எதிர்பார்க்கப்படும் குறைந்தபட்ச புள்ளி அளவு** |
|---|---|---|
| மேலதிக கல்வி தகைமைகள் | 10 | அவசியமற்றது |
| அனுபவம் | 30 | |
| அகராதி அலுவலக சேவை காலம் | 10 | |
| மேலதிக மொழி ஆற்றல் | 15 | |
| அச்சு கலை பற்றிய அறிவு | 15 | |
| ஆசிரிய தலைப்புடன் வெளியிடப்பட்டுள்ள ஆய்வு நூல்கள் | 15 | |
| நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டப்படும் திறமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

அரச சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய,

செயலாளர்
புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு